1983 பிப்ரவரி 14]

தமிழக மக்கள் இருக்கும்போது ஏன் இந்தச் சட்டத்தை அப்படிப் பட்ட இடங்களுக்கும் விரிவுபடுத்தக்கூடாது? மத்திய அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களிலும் தமிழ்தான் இருக்கவேண்டு மென்ற நிலைமையை ஏற்படுத்த அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர் களே, (Catering and Shops Establishment Act.) பொறுத்த வரையில் இதைத்தான் வலியுறுத்தி வருகிறோம். இதற்கு மேல் மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்றால் வேறு சட்டம்தான் அரசு கொண்டுவரவேண்டும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை மீறியவர்கள் எத்தனை பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிப்பார்களா? காரணம் பல இடங்களிலே தமிழில் எழுதப்படாமல் இருப்பதை நாங்கள் பார்க்கிறோம். ஆகவே தமிழில் எழுதாதவர்கள்மீது நட வடிக்கை எடுத்து தண்டனை அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர் களே, மீறுகிறவர்கள் மீது நீதிமன்றத்திலே வழக்குகள் தொட ரப்பட்டிருக்கின்றன. எத்தனை பேர்கள் என்ற குறிப்பு என்னிடத் திலே தற்சமயம் இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, தூய தமிழ் என்று சொல்லிக்கொண்டு, சென்னை நகரத்திலே, அர்மீனியன் ஸ்ட்ரீட், என்பதற்கு.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தூய தமிழ் என்று சொல் கிறீர்கள் ஆங்கிலத்திற்கு எதற்குப் போகிறீர்கள்?

திரு. மு. அம்பிகாபதி : அர்மீனியன் ஸ்ட்ரீட் என்றால் அந்தக் காலத்திலே அர்மீனியர்கள் இருந்தார்கள் என்பதால் அந்தப் பெயர் இடப்பட்டிருந்தது, ஆனால் இப்போது அர் மீனியன் என்பதற்கு அரண்மனை என்று பொருள்கொண்டு அந்தத் தெருவுக்கு அரண்மனைக்காரத் தெரு எழுதக்கூடிய இவ்வளவு பெரிய ப்ளன்டர் சென்னையிலேயே நடந்திருக்கிறதே இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதைப்பற்றி நட வடிக்கை எடுப்பார்களா? (விடை இல்லை).

உப்பளங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான திட்டங்கள்.

*வினா எண். 271—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

[1983 பிப்ரவரி 14

உப்பளங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு E.S.I. P.F. போன்ற திட்டங்களை அமுல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : உப்பளங்களில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தை நீட்டிக்க தொழிலாளர் ஈட்டுறுதி கழக மண்டல இயக்குநர் தேவையான புள்ளி விவரங்களை சேகரித்து வருகிறார். அவரது அறிக்கை கிடைத்ததும் ஈட்டுறுதி கழகம் மருத்துவ செலவிற்கு நிர்ணயித்த உச்சவரம்பின் கீழ் கிடைக்கக்கூடிய நிதி நிலையை பொறுத்து அரசு முடிவு எடுக்கும். லைசென்சு பெற்ற உப்பள நிறுவனங்களில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு 1966ஆம் ஆண்டு செப்டம்பர் 30-ஆம் தேதி முதல் சேம நிதி திட்டம் அமுலில் உள்ளது.

திரு. மு. அப்பாதுரை : தலைவர் அவர்களே, தமிழகத்திலே, இன்றைக்கு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் உப்பளங் களிலே பணிபுரிந்து வருகிறார்கள். இவ்வளவு காலமாகியும் இ.எஸ்.ஐ., பி.எப். போன்ற வசதிகள் அவர்களுக்குக் கிடைக்க வில்லை, இப்போது ஆணையர் புள்ளி விவரம் சேகரித்துக் கொண்டு வருகிறார்கள் என்று அறிவித்தார்கள். அதற்காக நன்றி. எவ்வளவு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு இது அமலுக்கு வரும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப் பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, விரைவிலே அமலுக்குக் கொண்டு வர எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படும். அது மட்டுமல்ல, இதுவரையில் கவர் ஆகாத மற்றத் தொழிலாளர்களுக்கும் இ.எஸ்.ஐ.யை விரிவுபடுத்த வேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய எண்ணம். மாண்பு மிகு உறுப்பினர்கள் திரு உமாநாத், ரமணி போன்றவர்களின் உதவிகள் எல்லாம் இந்த அரசுக்குத் தேவைப்படுகிறது. ஏனென்றால் வேலைநிறுத்தம் செய்துவிட்டு உடனே இ.எஸ்ஐ.க்கு சென்று 91 நாட்கள் சிக் லீவில் இருந்துவிடுகிறார்கள். ஆல் இண்டியா ஆவரேஜ் 8 சதவீதம் என்று இருக்கிறபோது தமிழ் நாட்டிலே அந்த சதவீதம் 16.5 என்ற நிலையில் இருக்கிறது. அந்தத் தொகை எல்லாவற்றையும் தமிழக அரசே ஈ.எஸ்.ஐ.க்கு கொடுத்துக்கொண்டு வருகிறது. சென்ற ஆண்டு ரூ. 275 லட்சம் கொடுத்திருக்கிறார்கள். இந்தத் தொகையை மெடிக்கல் பெனிபிட்ஸ் விரிவாக்கத்திற்கு பயன்படுத்தலாம். மிகப் பெரிய தலைவர்கள், தொண்டு செய்தவர்கள் எல்லாம் இங்கே இருக் கிறீர்கள். இந்த அரசின் சார்பாக பணிவோடு வேண்டிக் கொள்வது எல்லாம் வேலை நிறுத்தம் வேலை நிறுத்தமாக இருக்கவேண்டுமே தவிர, ஈ.எஸ்.ஐ. லீவாக மாறாமல் நீங்கள் பார்த்துக்கொள்வீர்களானால் எல்லாத் துறைக்கும் விரைவில் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு எல்லா அவசர முயற்சிகளையும் அரசு எடுத்துக்கொள்ளும்.

1983 பிப்ரவரி 14]

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நம்முடைய அரசாங்கம் அறிவித்திருக்கிற குறைந்த பட்சக் கூலிச் சட்டத்தைக்கூட இந்த உப்பளத் தொழிலாளர்கள் பெறாமல் இருக்கிறார்கள். குறிப்பாக தமிழக அரசே நடத்துகிற தமிழ் நாடு சால்ட் கார்ப்பரேஷனில் கூட குறைந்தபட்சக் கூலியை கொடுக்காத நிலை இருக்கிறது. ஆகவே குறைந்தபட்சக் கூலியை கொடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி தக்க முறையில் அரசிற்கு முறையீடு வருமானால் நடவடிக்கை எடுக்கப்படும்.

கொடைக்கானல் தாலுகாவைச் சார்ந்த பூண்டி கிராமத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண். 272—திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் தாலுகா பூண்டியில் குடிநீர் வழங்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) அத்திட்டம் எப்போது செயல்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) கொடைக்கானல் ஒன்றியத்தைச் சார்ந்த பூண்டி கிராமம் இரண்டாவது கட்ட தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. தற்போது, இக்கிராமத்திற்குக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கான பூர்வாங்க ஆய்வு வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன.

(ஆ) இத்திட்டம் 1983 ஆம் ஆண்டு மார்ச்சு மாத இறுதிக்குள் செயல்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மதுரை பசுமலையிலுள்ள மீனாட்சி தியாகராசர் குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள வீடுகள்.

*வினா எண். 273—திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) மத்திய அரசு உதவியளிக்கின்ற தொழிற்சாலை தொழிலாளர்களுக்கான வீடு கட்டும் திட்டத்தின்கீழ், மதுரை தெற்கு தாலுகா பசுமலையில் உள்ள மீனாட்சி தியாகராசர்